# சக்தி தர்மம் பற்றிய பாரதியின் கருத்தியல்

தி.செல்வமனோகரன், விரிவுரையாளர்
சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய காலனித்துவத்துக்கெதிராக சுதேசிகள் கல்வி, பொருளாதாரம், அரசியல், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு எனும் பல தளங்களின் வழி கிளர்ந்தெழுந்தனர். அக்காலகட்டத்தில் பிறந்து முப்பொத்தொன்பது வருடகாலந் தன் வாழ்வில் இந்திய தேசத்துக்கும் தன் தாய் மொழியாகிய தமிழுக்கும் சுதேச சமய, தத்துவ, பண்பாட்டு அம்சங்களுக்கும் அரசியலுக்கும் பெரும்பங்களிப்புச் செய்தவராக சுப்பிரமணிய பாரதி அறியப்படுகிறார். தன்கால சமூக, சமய, அரசியல் பிறழ்வுகளை அவதானித்து பகுத்தறிவின் வழி அவற்றுக்கெதிராகத் தன் எழுத்தாயுதத்தையும் தன் வாழ்வையும் பிரயோகித்தவர் இவரென்பர். பன்மொழியறிவும் உலகம் பற்றிய இவரது தனித்த பார்வையும் இவரது எழுத்துக்களில் பிரதிபலிக்கின்றன. அவர் தன் ஆக்கங்களின் உருவங்களிலும் உள்ளடக்கங்களிலும் புதுமை செய்ய இடையறாது முயற்சித்தார். அதனால் அவர் புதுமைக்கவி, புரட்சிக்கவி, தேசியக்கவி, மறுமலர்ச்சிக்கவி, மக்கள் கவி எனப்பலவாறு பாராட்டப்பட்டு நவயுகத்தை ஸ்தாபித்த மகாகவியாகச் சுட்டப்படுகின்றார் (கைலாசபதி,க.,(1999),ப.160).

பாரதியின் எழுத்துக்கள் யாவுமே "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் மக்களைக் கவரும் பண்பு" உடையனவாக அமைந்திருந்தன. கடவுளுக்குப் பாடும் திருப்பள்ளியெழுச்சியை பாரதி, 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி" என தேசத்துக்குப் பாடினார். பாஞ்சாசாலி சபதம் தேசவிடுதலையை அவாவி நின்றது. தொன்ம வடிவங்களையும், கருத்தியல்களையும் கதைகளையும் நவீன செல்நெறிக்கேற்ப பயன்படுத்துகிறார். இவை கவிதைகளிலேயே இடம்பெற்றிருப்பினும் உரைநடையிலும் அவற்றின் செல்வாக்கு உண்டு. பாரதியின் கவிதை மொழி எவ்வாறு தனித்துவமானதோ அவ்வாறே உரைநடையும் தனித்துவமானது. வாசகரின் நாடி பிடித்து கதை கூறும் பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றிய பேரனுபவம் பாரதியின் மொழியைப் பெரிதும் கட்டமைத்தது எனலாம். அதேவேளை அக்கால வாசகருக்கேற்பவும் பகைப்புலத்தின் வழியும் பாரதியின் மொழி வடமொழிக் கலப்பு மிகுந்த வசன நடையாகவே காணப்பட்டது. தூயதமிழ் மொழியைக் கையாளுதல் எனும் பிரக்ஞை அவரிடம் காணப்படவில்லை. குறிப்பாக சுதேசமித்திரனில் எழுதிய சமயம், தத்துவம், ஆன்மிகம் சார்ந்த கட்டுரைகளில் அப்பண்பைப் பெரிதும் காணலாம்.

தேசபக்தியின் விளைவாக பிரான்ஸின் இந்தியாவான புதுவையில் சென்று தங்க வேண்டிய இக்கட்டான சூழல் பாரதிக்கு ஏற்பட்டது. வறுமையும், நோயும் நிறைந்த அக்கால வாழ்வானது, வாழ்க்கை பற்றிய பல்வேறு கேள்விகளை பாரதிக்கு ஏற்படுத்தியது. விரக்தியைத் தந்தது. அங்கே அரவிந்தருடனும் வ.வெ.சு. ஐயருடனும் ஏற்பட்ட கூட்டும் அறிவார்ந்த அனுபவமும் அவரைப் புடம் போட்டன. அக்காலப்பகுதியில் உருவத்திலும், செயலிலும் சிந்தையிலும் பாரதியிடம் பாரிய மாற்றம் காணப்பட்டதாக அறிய முடிகிறது. இக்காலப்பகுதியில் அவர் பிரம்மஞானியாக, ஞானக்கிறுக்கராக, ஞானியாக திகழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகின்றார் (மணிகண்டன், ய., (2017), பக். 11-13).

புதுவையில் இருந்த காலப்பகுதியில் சுதேசமித்திரனில் (1916) பல கட்டுரைகளை எழுதினார். அவை விடுதலையியல், இலக்கியவியல், கலையியல், சமயவியல், சமூகவியல், தத்துவவியல், ஆன்மீகவியல், தனிமனிதவியல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களையும் கொண்டமைந்திருந்தன. அவற்றில் 'சக்திதர்மம்' எனும் மகுடத்தில் 24.7.1916, 6.8.1916 ஆகிய தினங்களில் கட்டுரைகள் சுதேசமித்திரனில் எழுதியுள்ளார்(தூரன். பெ, (1953), பக்.122,134).

அதேவேளை 22.9.1916, அன்று "லோகோபகாரம்" எனும் தலைப்பில் சக்தி தர்மம் பற்றிய கட்டுரையை எழுதியுள்ளார் (தூரன்,பெ.,(1953),ப.142). இக்கட்டுரைகள் மூன்றையும் பாரதியார் தன் சொந்தப் பெயரில் எழுதாது 'சக்திதாசன்' எனும் புனைபெயரில் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சக்தி உபாசகரான பாரதி சக்தி பற்றி பல்வேறு கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அதே போல தருமம் பற்றியும் அவர் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஆனால் அவற்றினின்றும் வேறுபட்டவகையில் 'சக்திதர்மம்' எனும் தலைப்பிலான இக்கட்டுரைகள் தனித்துவமாக எழுதப்பட்டிருப்பதைக் கருத்திற் கொண்டு இவை இங்கு ஆராயப்படுகின்றன.

**ஆய்வுப்பிரச்சினை**

பாரதி பேசும் சக்தி தர்மம் என்பதன் கருத்தியற் புலத்தின் தளம் யாதென அறிதலே ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

பாரதியின் சக்திதர்மம் கருத்தியற் புலத்தினைப் புரிந்து கொள்ளுதலே ஆய்வின் நோக்கம் ஆகும்.

**ஆய்வின் முறையியல்**

பாரதி சுதேசமித்திரனில் சக்திதர்மம் பற்றி எழுதிய மூன்று கட்டுரைகளே இங்கு ஆய்வுப்புலங்களாக எடுத்தாளப்படுகின்றன. இவை பற்றிய தனித்த ஆய்வுகள் வெளிவந்திருப்பதாக அறிய முடியவில்லை. இந்த ஆய்வில் விவரணம், பகுப்பு, ஒப்பீடு முதலாலானவை ஆய்வு முறைமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பாரதி – சக்தி – தருமம்**

தமிழின் நவகவிதையின் தந்தையாகப் போற்றப்படும் பாரதி கதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு போன்ற வடிவங்களையும் கையாண்டுள்ளார். அவை சமூகம், அரசியல், சமயம், தத்துவம், கலை, இலக்கியம், பண்பாடு எனும் பல்வேறு கருத்தியற்புலங்களைக் கொண்டமைந்துள்ளன. பாரதியின் புலமைத்துவம் ஆரம்பகாலத்தில் அவரது கவிதைகளை அடிப்படையாகக் கொண்டே மதிப்பீடு செய்யப்பட்டன. பிற்காலத்திலேயே உரைநடை எழுத்துக்கள் தொகுக்கப்பட்டன (தூரன்,பொ. ,(1953),ப.2). அவற்றுள் பல எழுத்துக்களிடையே பாடபேதங்களும் உண்டு (கைலாசபதி,க.,(1974),ப.3-4). பத்திரிகை எழுத்துக்கள் அவ்வக்காலங்களில் தொகுக்கப்பட்டாலும் இன்று வரை அப்பணிகள் நடைபெற்று வருகின்றன (வேங்கடசலபதி,ஆ.,(2008), ப.ii).

கண்ணன், சக்தி எனும் கடவுளரை அதிகம் போற்றியவர் பாரதி; இங்கு இயல்பாக பாரதிக்கு இந்திய சமயங்களில் - மெய்ப்பொருளியலில் இருந்த ஈடுபாடு இந்து சமய மறுமலர்ச்சியில் இருந்த ஊக்கம், மக்களை சமய அடிப்படையில் ஒன்றுதிரட்டப்பட வேண்டிய காலனித்துவ சூழல் தன் கருத்தியலை படைப்பாக்கவும் பரப்புரை செய்யவும் இத்தொன்மங்கள் தரும் வலிமை என்பன முக்கியமானவையாகின்றன. பாரதி ஒரு சக்தி உபாசகர்; வேத மரபிலிருந்தே இவற்றை அவர் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தர்மம், ஹிந்து தர்மம் முதலான தலைப்புக்களில் பாரதி தர்மம் பற்றி தெளிவுபடுத்துகிறார். தர்மம் என்பது நல்லொழுக்கம்; 'நல்லொழுக்கமானவது என்னவென்றால் தெய்வத்தை நம்பிப் பிறருக்குத் தீங்கு நினைக்காமல் நம்மிஷ்டப்படி நடத்தல்' (தூரன்,பெ.,(1953),ப.171) எனப் பாரதி விளக்குகிறார். அறச்செயல்களுக்கு முதன்மை கொடுக்கும் பண்பு பாரதியில் எழுத்துக்களில் முதன்மையுற்றுக் காணப்படுகிறது. அதேவேளை உலகின் மஹாதர்மமாக ஹிந்து தர்மத்தை பாரதி நிலைநாட்ட முற்பட்டிருப்பதும்

குறிப்பிடத்தக்கது. (சுப்பிரமணியபாரதி,சி.,(1961),ப.178) இந்தியதேசத்தையே அவர் ஹிந்து தேசமாகக் காணுகிறார் (மேலது,ப.190).

சக்தி தர்மம்

உலகமகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டாகிய 1916 இல் பாரதியால் எழுதப்பட்ட கட்டுரைகள் இவை. புதுவை மண்ணில் வறுமையோடும் நோயோடும் அரசியல் கைதியாக்கப்படும் அச்சத்தோடும் பாரதி வாழ்ந்து கொண்டிருந்த காலம் அது. அதேவேளை வ.வெ.சு.ஐயர், ஸ்ரீஅரவிந்தருடனான கூட்டிணைவு கலையிலக்கியம், ஆத்மவிசாரணை, சமூகம் எனப்பலதளங்களில் சிந்தனை விரிவுபடவும் செயலூக்கம் பெறவும் தேசபக்தியில் திளைக்கவும் உதவியது. வறுமையும், துன்பமும், நோயும் அவற்றின் விளைவான அச்சமும் பாரதியை புடம்போட்டது. சித்தக்கடல் எனும் பகுதியில் எழுதிய 'மஹாசக்தீயிடம் வேண்டிய வேண்டுகைகள்' (தூரன்,பெ.,(1953),ப.34) இவற்றை சான்றாதாரப்படுத்துகின்றன. எனது குடும்பப்பாரமெல்லாம் என்னைச் சேர்ந்தது. "உன்னைப் புகழ்ச்சி புரியும் தொழில் என்னைச் சேர்ந்தது தாயே. ஸம்மதம் தானா?" எனும் வரிகள் சக்தி மீது அவர் கொண்டிருந்த பக்தியை தெளிவுறுத்துகின்றன.

1916ஆம் ஆண்டு, யூலை 24ஆந்திகதி எழுதிய சக்திதர்மம் எனும் கட்டுரை சமய, தத்துவ கருத்தியல்களைக் கொண்டதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதன் முதல் வரி 'ஆத்மா – உணர்வு, சக்தி – செய்கை என அமைகின்றது. (சுப்பிரமணியபாரதி,சி.,(1961),ப.194) ஆத்மா என்பது பரமாத்மா அது உணர்வு – எங்கும் பரந்து யாவுமறிந்து அநாதியாய் சர்வவல்லமையுள்ளதாய் செயலற்றிருக்கும் அது நிர்குணம்; அதன் செயலாற்றல் சக்தி, அது சகுணம், அதுவே மஹாசக்தி – பராசக்தி என்கிறார். அது மூவகையாற்றல்களை உடையது. அவையாவன

1. விரும்புதல் - இச்சாசக்தி
2. அறிதல் - ஞானாசக்தி
3. நடத்துதல் - கிரியாசக்தி

எனப் பாரதி விளக்குகிறார். இதனை உரைத்தபின் 'ஆறு மதங்கள்' எனும் உபதலைப்பில் சங்கரர் ஷண்மதப் ஸ்தாபனாசிரியார் ஆன விடயத்தைக் கூறி அவ்வறுவகை மதங்களையும் பின்வருமாறு உரைக்கிறார்.

1. ஐந்தரம் -இந்திரன்
2. ஆக்னேயம் - அக்னி
3. கணாபத்தியம் - கணபதி
4. சைவம் - சிவன்
5. வைஷ்ணவம் - விஷ்ணு
6. சாக்தம் - சக்தி

வேத உபநிடதங்களை ஏற்றுக்கொள்ளும் இவ்வறுசமயங்களும் தத்தமக்கெனத் தனித்தனி புராணங்களை உடையனவென்றும் ஒன்றின் புராணத்தை மற்றைய பிரிவு ஏற்றுக்கொள்வதில்லை என்றும் விளக்குகிறார். எது எவ்வாறு இருப்பினும் மஹாஜனங்கள் சக்தியையே மாரியாக, காளியாக, மதுரைமீனாட்சியாக, காஞ்சிக் காமாட்சியாக மிகுதியும் கொண்டாடினர் என்கிறார் (மேலது ப.196). நவசக்திமார்க்கம் என்ற உபதலைப்பில் சாக்தத்தின் மூலதர்மங்களை தத்துவத்தளத்தில் விளக்குகிறார். பரமாத்மாவும் பராசக்தியும் ஒன்று;

சகுனநிலையில் பெண்பாலாகக் கொண்டு சாக்தர்கள் 'லோகமாதா'என பரமாத்மாவை போற்றுவர். பரமஹம்சர் தன் தாயெனக் காளியைக் கூறியது இவ்வாறே என்றும் நவசக்தி என்பது புதிய தெய்வம் அன்று என்றும் கூறி தாயுமானாரின் 'பதியுண்டு, நிதியுண்டு' எனும் பாடலை மேற்கோள் காட்டுகிறார். மேற்சுட்டிய ஆறுமதங்கள் 'ஒன்றது ஊர் வழிகள் ஆறுள' எனும் கோட்பாட்டின் வழி நிற்பன என்றும் இந்திரவழிபாடு முற்றாக அழிய ஏனையவை சைவ,வைணவ மதங்களுடன் இணைந்து கொண்டன என்கிறார்.

பின்பு சாக்தம் எனும் உபதலைப்பில் வங்காளத்தில் விளங்கும் சாக்தமதத்தைக் கூறி அதற்கு ஆதரவளித்த மன்னர்கள் விக்கிமாதித்தியன், சிவாஜி மற்றும் மஹாகவி காளிதாசரையும் குறிப்பிடுகிறார். இன்றைய நிலையில் சாக்தம் சீர்குலைந்து வருவதையும் 'ரகசியக்குடிகாரன்' எனப்பொருள்பட சாக்தன் எனும் சொல் வழங்கப்படுவதையும் குறிப்பிடுகிறார். பின் கணபதி வழிபாடு பற்றி விளக்குகிறார். இக்கட்டுரை "ஏகம் ஸத்"எனும் வேதவாக்கியத்தை முன்னிறுத்துவதோடு சமயச்சண்டையும் மத உயர்வு தாழ்வுச்சிக்கல்களும் வேதவிலக்கியங்களில் இல்லை என்றும் இவை பிற்கால புராண இடைச்செருகல்களே இவ்வாறான கருத்து நிலைகளைத் தோற்றுவித்தன என்றும் குறிப்பிடுகின்றார்.

1916ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆந்திகதி எழுதப்பட்ட இரண்டாம் கட்டுரை சக்தி வழிபாட்டை முன்னிறுத்துகிறது. மாரி எனும் சொல்லையே மேரி என ஆங்கிலேயர்கள் பிழையாக உச்சரிக்கிறார்கள் எனக்கூறி தொல் நாகரிக மக்களிடையே மாரி வழிபாடு சிறந்து இருந்தது என விளக்கமுற்படுகிறார். கிரேக்க நகரில் பெரிய மாரியம்மன் கோவில் ஒன்று இருந்தது என்கிறார். இயற்கைத் தெய்வமான சக்தியை ஈஸிஸ், மாரி, துர்க்கை எனப்பலவாறு அழைத்ததாகக் கூறி 'ஏகம் ஸத்' கொள்கையை முன்வைக்கிறார். மேலும் சுத்த அறிவு மட்டுமல்ல பிரபஞ்சமும் பரமாத்மாவே; யாவும் பரமாத்மாவே. பிரபஞ்சம் என்பது நாராயணன் சக்தியுடன் விளையாடும் விளையாட்டு; பராசக்தியே தெய்வம்; ஆத்ம ஞானத்தை காட்டுவன மட்டுமல்ல லௌகிக சாஸ்திரமும் பௌதிக சாஸ்திரமும் (Science) வேதங்களே என்கிறார். தத்துவார்த்த தளத்தில் ஸ்தூலத்தின் ஊடாகவே சூக்குமத்தை உணரலாம் என்கிறார். அதன் வழி இகலோகஞானம் முக்கியமானதென நிறுவுகிறார். சக்தியின் பெருமைகளை உரைக்கிறார். (மேலது,பக்,190 - 192)

லோகோபகாரம் எனத் தலைப்பிடப்பட்ட கட்டுரை 1916ஆம் ஆண்டு செப்ரம்பர் 22ஆந்தேதி எழுதப்பட்டுள்ளது. இது சக்தி தர்மத்தின் தொடர்ச்சி என ஆரம்பத்திலேயே குறிப்பிடும் பாரதி, லோகத்துக்கு உபகாரம் - உதவியாக நடத்தல் எனச் சொல்விளக்கம் தருகிறார். லோக உபகாரமாவது இனிய செய்கையைச் செய்தல்; சக்தியின் கருவியாக இருத்தலே சக்தி தர்மம்; அதன் வழி நிற்பவர் அச்சம் நீங்கி, பகைமை நீங்கி கருணையும் அன்பும் பொழிபவராக வேண்டும். லோகோபகாரம் எவ்வயதினும் யாவராயினும் செய்யத்தக்கதும் செய்ய வேண்டியதும் ஆகும். நோய்நீக்கம், பசிப்பிணி நீக்கம், அறிவு கொடுத்துதல் முதலியவையே தலையாய சக்திதர்மங்கள் அதனைச் செய்பவரே அமரர் என விளக்குகிறார். அந்த வகையில் இம்மூன்று கட்டுரைகளும் பின்வரும் விடயங்களை சாராம்சப்படுத்துகின்றன.

1. பரமாத்மா உணர்வு – சக்தி செய்கை
2. அறுவகைச்சமயங்களுள் பெண்பால் தெய்வத்தைக் கொண்டது சாக்தம்
3. சாக்தம் - நவசக்திமார்க்கம் - இன்றையநிலை
4. சக்தி தர்மத்துக்கு விஞ்ஞானமே வேதாரம்பம் - ஸ்தூலத்தாலன்றி சூக்குமத்தை அறியவியலாது.
5. சக்தி வழிபாட்டின் தொன்மை

6. அறுவகைச் சமயங்கள் உலகவாழ்வுக்கே முதன்மை கொடுக்கின்றன.

7. ஏகம் ஸத்

8. செயலே பிரதானம் (சக்தி பிரபஞ்சவடிவினள்)

9. அதுவே லோகோபகாரம் - இனிய செயல்வகை

சக்தி தர்மம் கட்டுரைகளின் வழி பாரதி முன்வைக்கும் பிரதான கருத்து ஏகம் ஸத் விப்ரா பௌதா பதந்தி" (Rig,I. 164 - 46) என்பதாகும். வருணன், வாயு, இந்திரன் எனப்பல பெயரிட்டழைக்கினும் பரமாத்மா ஒன்றே என்கிறார். சங்கரரை முதன்மைப்படுத்துவதன் வழியும் கவிதைகள ஊடாகவும் பாரதியை அத்வைதியாகவே பலரும் அடையாளப்படுத்துவர். ஆனால் இக்கட்டுரைகள் வேதமரபு வழி அத்வைதம் பேசுகின்ற ஸகுண பிரமத்துக்கு முதன்மையளித்து சக்தி – நாராயண விளையாட்டே பிரபஞ்சமாகப் பார்க்கின்ற விஷ்டாத்வைத மரபை அல்லது கிருஷ்ண லீலாவுக்கு முதன்மையளிக்கும் ஸ்ரீசைதன்ய வேதாந்தமரபை ஒத்ததாகவே பாரதியின் கருத்தியலை இனங்காட்டுகின்றன.

சங்கரரினால் ஸ்தாபகம் செய்யப்பட்ட அறுவகைச் சமயங்களாக ஐந்தரம், ஆக்னேயம் சைவம், வைணவம் காணாபத்தியம், சாக்தம் என்பவற்றை பாரதி பட்டியற்படுத்துகிறார். ரி.எம்.பி.மகாதேவன் சைவம், சாக்தம், வைணவம், சௌரம், காணாபக்தியம், குண்டலினியோகம், என்பவற்றைக் குறிப்பிடுகிறார். (Mahadevan,T.M.P. (1976), pp. 179 - 183) ஆயினும் பொதுவில் சைவம், வைணவம், காணபாத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்பனவே சங்கரால் ஸ்தாபிக்கப்பட்ட சமயங்களாகச் சுட்டப்படுகின்றன. வேத அடிப்படையில் பாரதியின் பகுப்பும் தாந்திரிக அடிப்படையில் மகாதேவனின் பகுப்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பது கவனத்துக்குரியது. இது பாரதியின் கெட்டித்த வைதிக மனப்பாங்கைத் தெளிவுபடுத்துகிறது.

அதேவேளை நவசக்திமார்க்கத்தின் வழி சாக்தத்துக்கு - இயக்கசக்தியாகிய பராசக்திக்கு புத்துயிர்ப்பு அளிக்கின்றார் பாரதி. அதற்கு அவர் கையில் எடுப்பது இயற்கைத் தெய்வமான (பெண்) மாரிவழிபாட்டின் தொன்மையையாகும். மாரியே மேரி, ஈஸிஸ் (ஈஸி) துர்க்கை என்கிறார். அவளே மஹாசக்தி – பராசக்தி என்கிறார்; அவளே படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில் புரியும் ஆதிசக்தி – பரமாத்மா என்கிறார்.

*"உலகனைத்துக்கும் உள்ள ஒரே காரணப்பொருளாவாள் பராசக்தி: அவளே பிரம்மா, விஷ்ணு,சிவன் ஆகியோரைப் படைத்தவள்: பிரபஞ்சம் பற்றிய அம்மூவர் தம் கடமைகளைச் செய்யப் பணிப்பவள்" (David Kinsley, (1990) ,p.133)*

எனும் பாகவத புராணவரிகளை இது ஒத்துள்ளது. சக்தியின் பரந்த வழிபாட்டை நிறுவ மாரியே மேரியென்று நிறுவ விழைந்த பாரதி, நாராயணன் விளையாட்டே பிரபஞ்சம் என்கிறார். வேதமரபுக்கு மாறான எந்தக் கடவுளையோ சமயத்தையோ அவர் குறிப்பிடவில்லை.

ஏகம் ஸத். அதேவேளை கடவுளின் இருப்பை, அது பிரபஞ்சத்துக்கு காரணகர்த்தா என்றும் விஷிட்டாத்வைதிகள் போன்று கடவுளே உயிர், உலகம் அதன் வடிவம் (உடல்) என்றும் கூறுகிறார். பிரபஞ்சமும் பிரபஞ்ச நிகழ்வுகள் அனைத்தும் தெய்வச் செயல்; நாராயணலீலை; அவன் சக்தியுடன் விளையாடும் விளையாட்டு இது என்கிறார். ஆத்மஞான நூல்கள் மட்டுமல்ல பிரபஞ்ச சாஸ்திரங்களும் வேதங்கள் என்கிறார். உலக அறிவாகிய விஞ்ஞானமே அறிவின் அடிப்படை: பரமாத்மாவை அறிய உலகு பயன்படுவது போல என விளக்குகின்றார். வேதமரபுக்கு மாறான சமணம், பௌத்தம், கிறிஸ்துமதம், மகம்மதிய மதம் உலக ஞானத்தை உலக அனுபவத்தை பழிப்பது என்பது அபத்தம் என்றும் அது குறைஞானம் என்றும் தர்க்கிக்கின்றார். இதை

*"பராசக்தியை முதலாவது இவ்வுலகத்திலே கண்டு வணங்கவே...டும். நட்சத்திரங்கள் எல்லாம் அவளுடைய விழிகள் தீயும் காற்றும் அவளுடைய வேகம் மண் அவளுடைய திருமேனி இருப்பதெல்லாம் அவளுடைய கலைதான் அவை இகத்திலே கண்டு போற்றி நலம் பெற வேண்டும்"(சுப்பிரமணியபாரதி,சி., (1961)இப.187)*

என பாரதி விளக்குகிறார்.

உலக ஞானத்துக்கும் அனுபவத்திற்கும் முதன்மை கொடுப்பது என்பதே பாரதி கூறும் சக்தி தர்மம் ஆகும். அதுவே லோகோபகாரம்: அதுவே இனிய செயல் வகை என்கிறார். சக்தியின் கருவியாக இருந்து கருமம் செய்தலே சக்தி தர்மம் என்கிறார். வாழ்வின் கீழ்மைக்கு அடிப்படை அச்சம். எதைக் கண்டும் அஞ்சியஞ்சிச் சாகும் மனநிலை சந்தேகத்துக்கும் கோபத்துக்கும் மனிதனை ஆளாக்கும். அது விரோதத்தை வளர்க்கும்; தகாத செயல்களைச் செய்வித்து பகையை வளர்க்கும். பகை போரை விளைவிக்கும்; அழிவை உருவாக்கும் இதனாலேயே வெகுளாமையின் பின் இன்னா செய்யாமையை வள்ளுவர் கூறவிளைந்தார். ஒருவர் பாவங்கள் செய்யவே அஞ்சவேண்டும்.

*"தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றுந்*

*துன்னற்க தீவினைப் பால்" (குறள். 209)*

எனும் குறள்வழி வள்ளுவர், 'தன்மீது உண்மையன்பு உள்ள ஒருவர் பிறருக்குச் சிறிதேனும் தீவினை செய்ய மாட்டார்" என்கிறார். பாரதியும் அச்சம் நீங்க அன்பே வழி என்கிறார். அன்பின் வழிநிற்றலே உயிர்நிலை. பராசக்தியின் கருவியாகிய மனிதர் அவள் கையில் ஆக்கக்கருவியாகத் தொழிற்படுதலே நன்று எனப் பாரதி விளக்கி நிற்பது சுட்டத்தக்கது.

அன்பின்வழி உலகிற்கு உபகாரம் செய்பவர் தன் சொந்தவாழ்வில் துயரம் அனுபவிப்பர் என எண்ணுதல் பிழை என பாரதி குறிப்பிடுகிறார். ஒருவர்க்கு செய்யும் நன்றி உரிய தருணத்தில் மீளவரும். அது இந்த ஜன்பத்திலேயே சாத்தியமாகும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். (குறள.;319) மன்னுயிர்களுக்கு இன்னா செய்தல் தன்னுயிர்க்கு இன்னாசெய்தலாகும் என்பதன் வழி பிறர்க்குச் செய்யும் நன்மை தனக்குச் செய்யும் நன்மை எனும் மறுதலைவாதத்தை வள்ளுவர் முன்வைக்கிறார். (குறள்.318) தெய்வத்தை நம்பி உலகில் நல்லகாரியங்களில் ஈடுபடவேண்டும். சோதனைகளையும் வேதனைகளையும் கண்டு சோரக்கூடாது. நல்லன செய்ய வயதோ, பாலினமோ, பொருளோ எதுவும் முக்கியமில்லை. நல்லெண்ணம் ஒன்றே போதும் என்பது பாரதியின் வாதமாகிறது. பாரதி இனியசெயல் வகையாக, அடிப்படைத் தேவைகளாக நோய்தீர்த்தல், உணவு கொடுத்தல், அறிவு கொளுத்துதல் முதலியவற்றை எடுத்துரைத்து தன்தன் சக்திக்கேற்ப தன்னை, தன்குடும்பத்தை, நாட்டை, மனித குலத்தைக் காக்கவேண்டும் என அறிவுறுத்துகிறார்.

அவ்வாறாயின் லோகோபகாரத்தின் - சக்தி தர்மத்தின் பயன் யாதென வினவின் மனிதருள் மாந்தராய் அமரநிலை அடையும் வாய்ப்பு சித்திக்கும் என பாரதி விளக்குகிறார். இதனையே வள்ளுவர்,

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்*

*தெய்வத்துள் வைக்கப்படும்" (குறள்.50)*

என விளக்குகிறார். 'வையத்துள் வாழ்வாங்கு வாழுதல்' என்பது சக்திதர்மத்தைக் கடைப்பிடிப்பதென்றாகின்றது.

முடிவுரை

வறுமையாலும் பசியாலு... நோயாலும் பிணிக்கப்பட்டு தன் சிந்தனை ஒடுங்க குடும்பமே துயருற முதலாம் உலக மகாயுத்தத்தால் உலக மாந்தரே துயருற்று இருந்த காலத்தில்

பாரதியால் இக்கட்டுரைகள் எழுதப்பட்டன. யுத்தத்துக்கு எதிராக அன்பை முன்னிறுத்தி யாவரிடத்தும் அன்பு செலுத்தி உதவிட வேண்டும். பிறர்துயர் தீர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தை உட்புகுத்த – கிளரச் செய்ய பாரதி இக்கட்டுரைகளின் வழி முயன்றிருக்கிறார். தன்வாழ்வியலின் துயர அனுபவத்தை – உலக அறிவையும் அனுபவத்தையும் எண்ணத்தையும் கருப்பொருளாக்கி அதனை உலகப் பொதுமையாக்குகிறார். தான் விசுவாசிக்கும் வேதப்பாரம்பரியத்தில் காலூன்றி 'ஏகம் ஸத்'எனும் தத்துவ முலாம் பூசி சக்தியுபாசகராக தற்சார்பு நிலையில் நின்று தெய்வ காரியமாக அதனை வலியுறுத்தி இதன் வழி நீ தேவனாவாய் என ஆசைகாட்டி இனிய செயல்வகைக்கு மனிதர்களைத் தூண்டுகிறார். வள்ளுவர் எதிர்மறைநிலையில் 'இன்னா செய்யாமை' எனக் கூறியதை இவர் நேர்மனப்பாங்கில் இனிய செயல்வகை என உரைத்து நிற்பது குறிப்பிடத்தக்கது. பரமாத்மாவின் இயக்கவியலே சக்தி: இரண்டும் பிறிதில எனும் அவரது ஆழ்மன வேதபிராமண மனப்பாங்கும் சக்தி மீது அவர் கொள்ளும் அதீத பக்தியும் இக்கட்டுரைகளில் மையக்கருத்தியலையும் தாண்டி துருத்திக்கொண்டு நிற்கின்றன. வேத அடிப்படையிலான ஹிந்துதர்மத்தை நிலைநாட்டவும் முற்படுகிறார். ஆயினும் சக்தி தர்மம் சமூகக்கடமையாக உலக ஞானானுபவமாக சூக்குமத்தை அறிய உதவும் ஸ்தூலமாக, கர்மாவாக அமரத்துவப் பதவியைத் தரவல்லதாக அவர் கூறிநிற்பது நயக்கத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


1. அரசு, வீ., (பதி), (2014), ***பெண்ணியமும் பாரதியும்***, அலைகள் வெளியீட்டகம், சென்னை.
2. கைலாசபதி, க., (1999), ***ஒப்பியலியலக்கியம்***, குமரன் இல்லம், கொழும்பு
3. சுப்பிரமணியபாரதி, சி., (1961), ***பாரதிநூல்கள் மூன்றாம்பகுதி***, சென்னை அரசாங்கம், சென்னை.
4. தூரன், பெ., (பதி), (1953), ***பாரதிதமிழ்***, அமுத நிலையம் லிமிடெட்,சென்னை
5. பரிமேலழகர்(உரை), (2002), ***திருக்குறள்***, சாரதா பதிப்பகம், சென்னை.
6. மணிகண்டன், ய., (1017), ***பாரதியின் இறுதிக்காலம்***, காலச்சுவடு பதிப்பகம், சென்னை.
7. Mahadavan, T.M.P., (1961), *Outlines of Hindusim*, Cherana Ltd, Bomby.